# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 232/மா/2017
ஆணை நாள்: 02–05–2019

உதவி ஆணையர்,
மத்திய மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர். --- முறையீட்டு மனுதாரர்

திரு. எம். ஏ. கலீல் ரகுமான்,
த/பெ. பி. முகமது அலி,
65, 2வது வீதி,
அல் அமீன் காலனி,
கோயம்புத்தூர் - 641 001. --- எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், உதவி ஆணையரின் கடிதம், இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

ஆணை:

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் உதவி ஆணையரின் 14.11.2017 தேதியிட்ட கடிதத்தில் உதவி ஆணையர் முறையீட்டில் திரு. எம். ஏ. கலீல் ரகுமான் எனும் ஒப்பந்ததாரா எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (11) ன்படி, மேற்படி குத்தகைதாரர் "பொது பணியாளர்" என்ற வரையறைக்குள் உட்படமாட்டார் என்பதால், உதவி ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி முறையீடு குறித்து

இம்முறைமன்றத்தில் விசாரணை செய்ய இயலாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர் (மத்திய மண்டலம்) தனது 23.4.2019 நாளிட்ட கடிதத்தில், இன்னும் ரூ.32,33,620/- (முப்பத்து இரண்டு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஆறுநூற்று இருபது மட்டும்) வசூல் செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். உரிய நடைமுறை விதிகளைப் பின்பற்றி மேலே குறிப்பிட்ட மாநகராட்சிக்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு, மே திங்கள் 2 -ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. உதவி ஆணையர்,
   மத்திய மண்டலம்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்.

2. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்

பிரிவு அலுவலர் (நிர்வாகம்)

பேரூராட்சி பிரிவு 3

இ. கோ. / உதரி.